மூன்று விரலும் முவ்வெரி போல
தோன்றித் தொகுத்தல் சொல்லுமி தன்றெழில்
முல்லை மெள்ள முருகாற் செண்பகம்
மல்லிகை யாம்பல வற்றின் குளந்தய
மலருடன் சாற்று மிளங்காய் நோய்க்குவி
காங்கூல மணுகுதலும் விரிகாங் கூலமென
மூவக மூவகமும் விரித்தல் திரிபுர
முறுவல் திரட்டி யுடனே வருமுக
மலசி வகுத்துறை வகுத்துரைத் தனரே. 15

அலர்பல் லவமே ஐந்து விரலும்
உலவிய கனிட்டன் முதலா யுள்ள
விரலொன்றின் பின்னே யொன்று நிமிர்ந்து
சென்றுளக் குழிந்து தெரிவற நிற்ற
லிதன் றெழிலது நீயா ரென்றல்
திகழுமிவை சோரவே............செப்பல்
பொருளில்லை யென்றல் புனைபண் புரைத்தல்
வரிசை யறவு மனகோசம்
கருதின ரிப்படிக் கமலம தென்றே. 16

சதுர்க் கையே சாற்றி நீடப்
பெருவிரல் நடுவிரல் பண்ணுநடு வில்மயில்
வளைந்து கூட்டி நால்விரல் நிமிர்த்த
லணிபுண்கை யொடுக்க நணியும் நடுவுடன்
வஞ்சனை யுறுதி வார்த்தை பொறையே

பத்தியம் புகல்மிக் கரங்கள் நிறையு
மண்டலமாய் நீடும் விசாரம் மிக்க
நாணம் விசேடங் தரித்தல் தக்க
வார்த்தை யுத்திரம் மரையிதன் மான
செவி யிருட்சியே பண்ணியே புத்திக்
கான விளையாட்டுக் கத்துரும் விருப்பம்
பொறையே நினைவு போற்றிய வாசையு
நிறையுங் கூட்ட நிகரில் சுத்தத்
திருத்த மதுரந் திகழிருள் மேன்மை
விரித்த சீலம் மெச்சுக மினிப்புடன்
அற்புத மின்ப மதுவில் லாமை
சொற்படு நற்குணந் தொல்குண மென்றைக்
கேட்டலொளி பஞ்சவன்ன மென் றிவை
காட்டு மிக்கை நடுவிர லேந்தல்
வெண்டை யசைக்கு மிக்கரம் வாய்ந்த
வட்டம் பொன்மை வண்சிவப்புச் சொல்லு
மிக்கையில் பெருவிரல் துடைத்தல் நல்ல
பசுமை நாடிய நீலம் காட்டு
மாகிச் சாந்துக் கரந்தான் தொட்டு
மாலை சொல்லிய வின்மை நெஞ்சில்
பாவினை நிகரில் கல்விஞ்ச
வுரைத்த லன்மேவு மிதன்றெழில். 17

வண்டு கையே மன்னிய நடுவிரல்
கொண்டு நுனிவிரல் கூடச் சுட்டுட
வளைந்து சொல்லா திருவிரல் விட்டு
நிமிர்தல் மேவு மிதன்றெழில்
தாமரை யுற்பலந் தண்டு பூங்கொத்
திவையாமெனக் கொடலணி வண்டு காட்டல்
கண்ணு பாணங் கதிர்முக வாட்டஞ்
சொன்னர் பரதத் துணிவறிந் தாரே. 18

அன்ன வாயே யங்குட்டந் தற்சனி
மன்னிய நடுவிரல் வந்து கூடச்
சிறுவிர லணிவிரல் சரிந்து நிமிர்தல்
பெறுமக் கன்னைப் பிணமம் பேசி

யலர்பல செறிவை சிதரு தல்செரு
நொய்மை அறியு மேன்மை பயமிலாமை
நெறிப்பட வுரைத்தனர் நீணிலத் தோரே. 19

அன்னை பக்க மறியுங் காலை
பின்னைய தற்சனி பெடநா மிகைக்கோட
வதன மிசையே பெருவிரல் கூட்டி
நீடிக் கனிட்ட நிலைபேர் தன்றொழில்
தற்பனம் பணமே நறிணை யேற்றல்
தசைபெறு மற்புத வுண்டி கொடுத்தலவ்
வுண்டியை யங்கீ கரித்தலா சமனமிவை
தங்கும் வேதியர்க்குத் தானென வுரைத்தல்
சிங்கன மாலே பன்மணி நூலே
புளகம் பரிகரி மரிமங் கிணையுரு
மைந்தர் புலவி யுரைக்குமற் றிக்கைதான்
முந்துகபேரம் பொருந்துநோ யமுதா
சோகமும் பிரிவுஞ் சொல்வ திப்படி
யாகிய பிரிவு மதன்செய லதுவே. 20

சந்தங் கிஷமே தற்சனி பெருவால்
முந்துனி யிதன்முறை மையில் கூட்டி
தங்கு மூவிரல் தாமவை விரிய
அங்கை குவிய அராளம் போல
வைத்துத் தான் மூவகைத் தற்சனி
முகம் பக்கம் புதியவக்கரம் புகன்ற
பெயர தின்முகச் செந்தங்கிஷ மொழியில்
மெய்ப்பாடு மிகுபூங்கொத்து மேம்படக் கொய்த
லஞ்சனந் திரித லாகாதி யாகில்
பூதல வஞ்சக் கொம்பை வாய்மொழி
யிசட்சி மறரி னிணை யுணர்த்தல்
பேசின ரதற்குப் புரைப்படு பக்கச்
சாந்த வங்கிஷம் புகல்நிறையு கவிதை
நேர்பதி கொலைத்தொழில் பகரும்
வெஞ்சொற் பனவ வாசினத் தொடரிக
வெம்பாண மிலக்கி நிலப்படுத விருகையுங்
கூட்டி யோகந் தியான மொருவர்

காட்டும் புகல்வலிக் கரங்களி றுகச்சில
சந்தவங் கிஷமலர் கொய்தல் தக்கபூத்
தொடுத்தல் சொல்லுங் கயிறு தீற்றல்
மயிர்த்துரும் பாதி வகைபெறக்
காட்டில் செயிறரு விசாரஞ் செம்பஞ்சணித
லிவையிறு சந்தவங்கிஷத்தி னியன்ற விதற்கே. 21

முகுளக் கையே மொழியுங் காலை
மிகவிர லணைத்து மேம்பட வேந்திக்
குவித்துக் கூட்டக் கூறுவ ரிதன்றொழில்
புவிமுத லாகிய தோர்பூ தங்கள்
வினவ சொறித லுயர்திரள் காட்டல்
புல்லிய புலியடித் தாமரை முதலாம்
பூமிக ளங்தெய் வத்தின்
தியான மற்சினை செப்புமென் றனரே. 22

சிலந்திக் கையே சொற்பம் கோசம்
மலர்ந்த விரல்கள் வளைத்த விதன்றொழில்
அளகந் தனைமுடித் தளிப்பரத் தல்முத
லளித்தல் வவ்வுத லுளையுஞ் செறிதலுயர்
புல்லிய புலியடி வுடனே புகன்ற
கல்லெடுத் தெரிதலுங் காட்டுமென் றனரே. 23

தாம்பிரச் சூடந் தானங் குட்டம்
மேம்படு பெட்டி நுனியின் மேலத்
தற்சனிக் கொத்த தகுவிர லிரண்டும்
பொற்புட னங்கை பொருந்துத லிதன்றொழில்
தலத்துதி நொடியெடுத் தண்டுடன் பூவும்
நாபமும் காட்டல் நானூ றுயிரம்
மென்னும் பலவு மியம்பு மென்றனரே. 24

சதுர்மக் கையே சொல்லுங் காலை
காமகத் திரிக்கை கானள துளங்கி
செங்கைத் தலமுற் செந்து விளைத
லங்கதன் றொழில் விருகத்தி நசைவுடன்
நன்நடை யாமைபச்சொரி தில்புலி
புலியடி காட்டு மேப்புகன் றனரே. 25

பரம கோசக் கையே படும்
பெருவிரல் கூட்டத் தற்சனி
கனிட்ட னனும் கநிட்டல் நீடல்
காணு மதன் றெழில் மயூரங்
கழுநீர் தாமரை கவினபெரு மிதழுடன்
விழுமிய வான விளம்புமென் றனரே. 26

பிண்டிக் கையே பேசிற் தற்சனி
கண்டு பெடய நாமிகை கனிட்டனே
கீழ்வளை யணிநற் பெருவிரல் தொகுமிவை
பிசைசெய் தோடு நீங்க விதன்றெழில்
மனத்துயர் நுகற்க தொழில்
மன்னுகுச் சிததொழில் தின்னப் படுவன்
குணவாய்ச் சொ....................ல
அள்ளிக் கொள்ளுதல் தன்விர லெண்ணுதல்
கனிட்ட நீட்ட லாறு முதலாம் •
[அ]நாமிகை நீட்டல் எழுகுதல் மெட்டு
முதல் மியல்படு நீட்டி
சுட்டி லொன்பதுஞ் சொல்லுமென் றனரே. 27

மென்னிலை சொல்லிற் கனிட்ட [ன]நாமிக
மன்னிய பேடு நீங்கி[யே] நாலும்
நிமிர்த்துப் பெருவிரல் பாங்குரு தற்சனி
மிகையே பத்திதல் சாதிநான் கென்ப
வேதநா லுடனே யறம்பொரு ளின்ப
மனிதிகழ் வீடு சிறந்த தேவர்கள்
திசைநால் கவித்த நாக மென்பவை
நாலிவை யொழிந்துஆகம பொருள்பின மிறகே. 28

உன்னிதக் கையே உரைதரு கனிட்டன்
மன்னிய பெருவிரல் வந்து கூட
வொழிந்த விரலுள் வளையா நிமிர்தல்
மொழிந்த விதன்தொழில் மூன்று கால
தன்மை முன்னிலை சாற்றிய படர்க்கை
முன்னிய முக்கண மும்மூர்த் திகளறு
மூன்று லோகம் முப்புறம் சுடர்தமிழ்
தோன்ற விதுவே தொகுத்துரைத் தனரே. 29

மண்டலக் கையே மயங்கு மங்குட
தண்டாப் பெட்டின் றன்நுனி பொருந்த
நின்ற வகுட்டமல நின்ற வளைத
லொன்றிய வலக்கை யுறம்பமுத் தண்டம்
கண்டகம் வளையே காண்ட கநுதப்
படைவுடன் காட்டி லபிநய மிதற்கே. 30

சங்குக் கையே சாற்றுநால் விரலு
மகுட செற்றே பான்மை வளையப்
பெருவிரல் நிமிர்தல் பேணு மிதன்றொழில்
தகும்மோ தடைத்தல் சான்றோ ராலே
வட்டமுள் ளங்கி சய்யாநற் கூட்டம்
வொளிய நுதற் கணங்கள்
காட்டு மென்றனர் கலைவல் லோரே. 31

இலதைக் கையே யியம்பிற் பேடு
மலிவெடு தற்சனி வந்து கூடி
இருநுனி இயங்கு குட்டம் சோவடி
உன்னு மிகைக்க னிட்டனுள் வளைதல்
கூட விழைதல் குலவிய மணிபொன்
நிடய வைரங் காட்டு மென்றனரே. 32

வலம்புரிக் கையே வாயாத கனிட்டன்
நலந்திகழ் பெருவிரல் நலமுடன் நிமிர்தல்
தற்சனி.........லோய்ச் சற்றே வளைய
வெள்ளி மொழிந்தது மேதகு நினைவு
.........வள்ளுத கஞ்ச மனக்குற்ற
வி.........டு மென்றனர் கற்றுணர்ந் தோரே. 33

ரட்டை.. ......கை பதிநஞ் சாவென

அஞ்சல.........கடகம், ஸ்வஸ்திகம், கடகமுகம், உ...த்துங் கம், நிஷாதம். டோளம், புஷ்பபுடம், மகரந்தம், மஹஜ தன்னம், விக்கிறதம், வர்த்தமானம், கொற்கை, புத்திரிகம், தொழில்.........க்கை, கை இரண்டும் பதாகையாக்க் கூட்ட அஞ்சலிக்கை, அ

அஞ்சலிக் கையே இரண்டும் வளைத்து
அங்குட் டநுனி வைக்கக் கபோலும்.

இருகை விரலு மனேயும் தம்மு(ள்)ளே
கோத்து பெருவிரல் நீட்டகற் கடகம்
பதாகை இரண்டு மணிக்கட்டி
லொன்று மதுவே ஸ்வஸ்தி கையாம்.

இருகை கடகம்

மணிக்கட்டி லொன்றில் கருது கடகா
வத்த மெனபின் றக்கையோ டராளம்
ஸ்வஸ்திகம் வைக்க உருப்பமைந்...........
உத்துங்கமென..............
வலக்கையது முட்டி சம்புடன் செய்ய
நிலக்கை, நீழ்குஞ்சிதக்கை.

நிஷாதம்

இருகையுஞ் சற்பசிரமாக கைரிடன்
மடிமேல் வைக்க டோள மேனகையிரண்டும்
கற்பசிர மாக்கி ரிடன் கூட்டில்
யெந்த புஷ்ப புடம்.

பிறைக்கைமேல் பிறகை வைக்கில் மகரக்கையாம்
இருகை யெருதந்தோள் முழங்கைமேல் கவிழ்த்து
நீட்ட பொருமத யானையின் கோடு
இது எதிரே வைக்க வகுத்த மென.

முகுளக்கை கீழ்வர்த்தமான மென,
கடக்கை சுட்டா நுனி விரித்துக் கூட்டக் கொற்கையாம்
இருகையும் தம்முள்ளே கோத்து
மருவுமது புத்திரிக மென.

ஒற்றக்கை முப்பத்து மூன்றுக்கும் ஆண்கை பெண்கை அலிக்கை பொதுக்கை வரும்வாறு.

ஆண்கை

முட்டி சிகரம்மலர் பரம்சந் தங்கிஷம்
விட்ட சிலந்தி மிகுசூசி ஒட்டு
சதுரம் பதாகந் துருதிரு
பதாகம் அதிகமுட ணுண்கை நவமாம்.

பெண்கை

கடகஞ் சுகடுபகதுண்டங் காங்கூல மன்ன
மடவாம் பிறக்கை யாராள மந்தட
மருவு மன்ன பக்கந் தாம்பிதை
சூட மான்றலை யாக
மின்ன மெட்டும் பெண்ணு கும்மே.

அலிக்கை

சர்ப்பசிரம் வண்டு தனிமுகுளங் கத்திரிகை
விற்பனஞ்சேர் கோசம் கபித்தமுடன்—அற்புதமே
யாமம் மலியா ரென்றுரைப்ப ரேயலிக்கை
பாகனைய சொல்லார் பரிந்து.

பொதுக்கை

உன்னிதமா மண்டலம் யூறவலம் புரியே
மின்னிலையாகுஞ் சங்குலதை மேம்படவே—மன்னிவரு
தூமம் பிண்டியாய்ச் சொன்னர் பொதுக்கைஎனத்
தார்மேவுங் குழலாய் தான்அழகே தொழில்கை

தேசிபொருள்கை

ஒற்றக்கை நாலெட் டடனென்று தப்பாமல்
பற்றி விறட்டக்கை பதினைந்தாய்—நிர்த்தக்கை
முப்பதுமாய் தனக்கு மூண்டதொழி லத்தனையுஞ்
செப்பு முனிவன் செயல்

கை வகை முற்றும்.

ஹஸ்தகானம்

அத்தகான மிவைநான் குரைக்கிலிவை பெத்தும்
வெட்டிதமும் வெட்டிதமே சுத்தவியா—வர்த்திகமே
மேவு பரிவு வர்த்திகமென் ஞர்பரத
சாத்திர நூல் வல்லவர்கள் தான்.

சுபவெட்டிதம், அபவெட்டிதம், வியாவர்த்திகம், பரிவர்த்தகம் என்னும் கானங்கள் நான்கு மறியுங்காலை ;

சுபவெட் டிதமே மறியுங் காலை
சுபமார்புக் கருகே தோன்றித் தற்சனி
முதலாய் தயங்கிய விரல்கள்
பொற்புட னங்கை போதவுள் வளைத்தல். 1

அபவெட் டிதமே விளம்புங் காலை
உபவெட்டி தஞ்சுட்ட தலாயு வமையில்
விரல்க ளாறு மொருங்குடன்
வளைத்து விடுத லெனப்புகன் றனரே. 2

வியாவர்த் திகமே விளம்புங் காலை
உயர்விரல் கனிட்டன் முதலுள விரல்க
ளுருவிய கங்கை பொருந்தவுள் வளைத்தல். 3

பரிவர்த் திகமே பகரில் கனிட்டன்
முதலாம் விரல்கள் முலப்புறத்தி
லிதமுடன் விடுத லென்றனரே. 4

ஒற்றக்கை, இரட்டக்கை, நிர்த்தக்கை, வற்தனைக்கை என்கின்ற ஹஸ்தசேஷ்டங்களும், அண்டபேதம், புடபேதம், பூசாரி, ஆகாசசாரி, அலங்காரசாரி, இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்றவையும் வருமாறு.

சொல்லின் கண்ணைக் கண்ண ழித்தல்
அல்லயங் குழலாய் அண்ட பேதம்.

ஆற்றி யெழுத்தை யகலாத வண்ணம்
போற்றி வருதல் புடபேத மாகும்.

நாமிசை வாத்தியம் நவின்றபின் கூத்தாய்
பூமிசை லொன்றிடில் பூச்சாரி என்பதாய்
காயத்து டன்தாக்கி நின்றபொரு ளெல்லாம்
காசத்திடை சொல்லிலா காச்சாரி யென்ப.

சங்கதே நடம்புரிந்து தாளத்தோடே யோடுங்கா
லங்கத்தால் செய்த தங்கசரி என்ப.

நான்முகனுல் படைக்கப்பட்ட மாத்திரைகளையும் திருமாலாலே படைக்கப்பட்ட தாளமுழவங்கள் கிரிகைகளும் இதெல்லாம் பரமேச்வரன் மாத்திரைகளையும், பல கிரியைகளையும் தமக்குத் தமக்கு அங்கமாகப் பாடினு ரென்றவாறு.

இறந்தகாலமாவது, தாளத்தை விதாளமாகிப் பிறக்க விட்டுப் பின்கூட்டி முடிப்பது.

நிகழ்காலமாவது, ஆடுமிடத்துத் தாளத்துடனே அளவு மானம் பிரியாதபடி நிகழ்கின்றது.

எதிர்காலமாவது, தாளத்துக் கெதிராக ஆடிப் பின்பு தாளத்திலே முடிப்பது.

இவை எட்டு வகையாலும் ஆடுதற்கு உரித்து என்றவாறு.

புஜங்க முரளிதன் முதலான சிறிய விஷயங்களோடும் கூடி இருக்கின்ற தாண்டவமாவது, சொக்கதாண்டவம், ஆனந்தத் தாண்டவம், என்னும் இரண்டு பேதமான காரணக்கூத்தும், இக்கூத்திற்குரியதாகிய கால் கைகளும் வருமாறு.

மண்டலம், வர்த்தனை, காணம், ஆலிடங்கீத்து, கடித்தரிகுஞ்சிப்புகட்டு, புரியம் களியக்கால், உள்ளாளநட கடத்தல், கம்பித்தல், ஊர்தல், நடுக்கல், வாங்குதல், அப்புதல், அணுக்குதல், ஆராதவாசிப்புகுத்துதல், நெளிந்தகால், மாறுகால், இட்டுப் புகுதல், சுற்றி வாங்குதல். உடற்புரிவு. இப்படி இருபத்து நான்கு பேதங்களுடைய தேசியும், சுற்றுதல், எரித்தல், உடைத்தல், ஓட்டுதல், கட்டுதல், வெட்டுதல், போக்கல், நீக்கல், அணுகுதல், முறுக்கல், வீசல், குடுப்புக்கால், கத்திரிகைக்கால், கூட்டுதல் என்று பதினன்கு தொழில்கா லென்றவருக்கும்,

மெய்சாய்த்தல், இடைநெறித்தல், அழித்தல், அணைத்தல், தூக்குதல், அசைத்தல், பற்றல், விரித்தல், குவித்தல் இவை யொன்பதும்,

சிங்களத்துக் கைகள் ; தேசி, வடுகு, சிங்களம், இந்த மூன்று விதமாக,

வைஷ்ணவம், ஸமபாதம், வைசாகம், மண்டலம், ஆலீடம், பிரத்யாலீடம், என்று பாதம் ஆறு,

ஸமம், உத்கட்டிதம், ஸஞ்சாரம், காஞ்சிதம், குஞ்சிப்பு என்ற நிலைகளைந்தும்,

சரிகை, புரிகை, சுமகலித்திகை, உரத்தக்கலிகை, புராட்டதம், அத்தபுராட்டதம், ஸுவஸ்திகம், உல்லோலம், குத்தம்,

வேட்டனம், உல்வேட்டனம், தாக்கெனப், பிராயவிருத்தம், உபாக்ஷேபனம், அபாக்ஷேபனம், நிருட்டனம் என்று அங்கங் கிரிகைகள் பதினாறும்,

உக்கிரம், நூவை, ஆபோகம், என்று திரிவிதமாய் இருக்கின்ற கீதங்களால் பூத பவிஷ்ய வர்த்தமானங்களாய்த் தாளத்திலே யொத்தும் மாத்திரையிலே பிறக்கிற காலங்கள் வடிவாக ஆடி முடிக்கிற நிர்த்தம் பரமேச்வரனுடைய பூஜாக்ஷரமாக, ஈச்வரனுடைய ஸந்நிதியிலே, தேவகன்னிகையினுல் நின்று நிருத்தம் செய்யப்படும்.

நாடகம், பிரகரணப்பிரகணம், அங்கமென்று தர்மார்த்த காம மோக்ஷங்களை யடைவிலே ஒன்றுக்கொன்று குறைந்தேறி வருகிற வஸ்துவும், உள்ளத்தையும், இல்லாததையும், உள்ள நாயகராயும், இல்லாதநாயகராயும், இருக்கிற யோனியும், கௌசிகீ, ஆரபடீ, பாரதீ, ஸாத்வதீ, என்று சதுர்விதமாய் இருக்கிற விருத்தியும், முகம், பிரதிமுகம், போகம், யுக்தி, என்று பஞ்சவிதமாயிருக்கிற ஸந்தியும், வாரம், ஈஹாமிருகம், ஸமவாகாசம், அடகு, வியாயோகம், பரணம், விதி, ஸல்லாபம், உதிருஷ்டாங்கம், பிரஜனம், என்று பத்து விதமாயிருக்கிற ஜாதியும்,

வீரம், பயம், பீபத்ஸம், அத்புதம், ஹாஸ்யம், ரௌத்ரம், சிருங்காரம், கருணை, சாந்தம், என்கின்ற நவரஸமும், இந்த நவரஸங்களடியாகவும்,

நகைத்தல், இதழ்மடித்தல், புருவந்துடித்தல், கவிழ்ந்து நோக்கல், கண்ணிமைத்தல், களித்துப் பார்த்தல், கடைக்கண்ணிறுத்தல், ஏறிட்ட பார்வை, பார்விழித்தல், சிரங்கணித்தல், தலையசைத்தல், கைநெறித்தல், கைவிரித்தல், உடல்நடுக்கம், விரல்நொடித்தல், மூரிநிமிர்த்தல், கொட்டாவி, மிளிர்வாடல், கண்சிவத்தல், கண்ணீர் வேட்கை, நடுக்கம், புடைபேர்ச்சி, நிட்டிப்பு, விம்மல், கண்ணீர் வீழ்த்தல், குறைமொழி, பலகால் பிதற்றல், தடுமாறிச் சொல்லுதல், மெய் புளகித்தல், முதலாயிருக்கிற அபிநயங்களும்,

ஸ்தம்பம், பிரளயம், ரோமத்வயம், முதலாயிருக்கிற ஸத்வங்களும்,

நாயகன், பிரதிநாயகன், உபநாயகன், அனுநாயகன், என்கிற நான்கு நாயக விசேஷங்களும்,

உள், சொல், ஆகச்சொல் என்று திரி (திவி) விதமான சொல்லும்,

சுணம், சுரிகம், வண்மை, வதைகம், என்று நான்கு விதமான சொல்லும்,

பெருவண்ணம், இடைவண்ணம், வகுப்புவண்ணம், என்று திரிவிதமான வண்ணங்களும்,

கண், கூடுகானம், உள்வரி, பிறவரி, கிளர்வரி, ஐயம், கொச்சி, காட்சி, எடுத்துக்கொள்க, என்று அஷ்டவிதமான வரிகளும்,

ஆரியச் சேதமும், தமிழ்ச் சேதமும், இரண்டு வகைச் சேதங்களும், என்று பதினுன்கு வகையாய் இருக்கிற விலக்குறுப் பினை யுடைத்தாய், அங்கோபாங்கப் பிரத்யாங்கங்களை அபிநயங் களால் அபிநயிக்கப்படும்.

"இதரண்டவம், நவதாண்டவம், நாட்யம், லாஸ்யம், நிர்த்தம் ததைவச" என்று மூன்று விதமாயிருக்கிற சாந்திக்கூத்தையாடி அருளினுர், என்றவாறு. புஜங்க முரளிதன் முதலாயிருக்கிற கிரியா விசேஷங்களோடுங் கூடிஇருக்கிற சொக்கதாண்டவம், என்னும் இரண்டும் காரணக்கூத்து.

தாண்டவமாவது, சாந்திக் கூத்தாகிறது.

நிருத்தமாவது, தேசி, வடுகு, சிங்களத்திற்குக் கால் கை திரிபதாகை, தேசியின் தொழில் கால் இருபத்து நான்கிற்கும், விரிவு வரும்வாறு.

மணல் விந்தை என்பது, ஸமநிலைதனிலே ஒருகாலை முன்னே யூன்றி, இக்கால் தன்னை பின்னூன்றிவலம் புரிவது ;

விந்தனைகானமென்பது பாதமுயர்த்தி, உடம்பொடு சேர்தல்.

ஆலீடமாவது மண்டலமாக நின்று ஒரு காலிலே மெய் சாய்த்திருக்குமது.

கீற்றுவது நிலைநின்று மருங்கசைதல். கடிச்சரியாவது, அல்குலைச்சாய்த்தல் ; குஞ்சிப்பாவது, காலை வளைத்துக் குஞ் சித்தல் ;

கட்டுப்புயமாவது ஒருகாலை யுதைத்துப் பக்கத்தில் குத்தி, ஒருகாலை முன்னே யூன்றி மாறி வருமது.

உள்ளாளமாவது, குஞ்சித்த காலைச்சுற்றி உடலணைய வைப்பது.

கட்டுதலாவது, வலக்காலை விடப்பக்கத்தில் குத்தி, இடது காலை வலது கால் உதைக்க, இடக்காலை வலப்பக்கத்தில் குத்தி, அக்காலை வலக்காலோடு கட்டி வீசுமது.

கம்பித்த காலாவது, இரண்டு காலையும் பக்கத்தில் கம்பித்துப் பலகா லூருமது.

ஊருதலாவது, முன்னும் பின்னும் பக்கமும் பலகா லூருமது.

நடுக்கலாவது, காலில் கத்திரிம வருமது.

வாங்குதலாவது, ஒரு காலை முன்னே குத்திப் புரிந்து வாங்குவது.

அப்புதலாவது, வலக்கால் உதைக்க இடக்கால் புரட்டியும், இடக்கால் உதைக்க வலக்கால் புரட்டியும், வருவது.

அணுக்கலாவது, தலத்தில் பாதம் பட்டது படாதென உதைக்கப் படுவது.

ஆச்சிப்பாவது, பாதத்தை ஒற்றி இருபாலும் போக்கி முன் அசைக்குமது.

குத்துதலாவது, பெருவிரல் நீக்கி அணைவிரல் நான்கும் முன்னே மடித்துக் குத்தித் தீருமது.

நெளிதலென்பது, காலை முன்னே யூன்றி நெளிக்குமது.

மாறுகாலாவது, கால்களை மாறி ஸ்வஸ்திகமாக நின்று வகுத்தல்.

இட்டுப்புகுதலாவது, ஒரு காலை முன்னே குத்தி, மற்றக் காலைக்கட்டி மாறிக்கட்டி வைக்குமது.

உடல் புரிவது, சுற்றி வாங்கலாவது, சுற்றுதல்; காலைச் சுற்றி வாங்குதல்.

எறிதலாவது, சுற்றிக்காலை எறிதல்;

உடைத்தலாவது, சுற்றிக் காலை இடங்கொள்ள வைப்பது.

ஓட்டுதலாவது, சுற்றிக் காலைப்புரிந்து உதைத்து மாறி யொட்டுதல்.

கட்டுதலாவது, தன்மேல் பலகால் கட்டு கட்டுதல்.

வெட்டுதலாவது, ஒருகாலைப் பின்னே குத்தி ஒருகாலை முன்னே யுதைப்பது.

போக்கலாவது, ஒருகாலைத் தெளியப் பக்கத்தில் குத்தி முன்னே ஒருகாலை வீசுமது.

நீக்கலாவது, கூட்டிய தோள்களை நீக்குதல்.

முறுக்கலாவது, மடித்துத்திக்கல்;

வீசலாவது, காலை எடுத்து நான்குபாடும் வீசுமது.

அணுக்கலாவது, நிலத்தினும், உடலினும் சிறிது தட்டி அணுக்க வருமது.

குடும்புக்காலாவது, ஒட்டி முன்னெட்டி கத்திரிகைக்கல் பற்றிக் கடுக முடுகுமது.

கூட்டுதலாவது, கடுக்கப்பகுக்க அடியைக் கடுகாசிக் கூட்டுமது.

வடுக்கலற்றொழில் கண்டு கொள்க.

மெய்சா யிடைநெரிவு மேற்சுழிவோ டாங்கணைத்தல்
கைதூக் கசைத்தல்கா லைப்பற்றல்—கைகள்
விரித்தல் குவித்தலிவை சிங்களமா மென்று
தெரிவித்தனர் தண்டமிழோர் தேர்ந்து.

சிங்களத்தின் காற்றொழிலை யுணர்வுற்று, மெய் சார்த்த லாவது,

செய்யிற் தொழிற்கு ஈடாக உடலைச் சாய்த்தல்.

இடைநெரிவாவது, செய்யிற் தொழிற்குத் தொடங்கி இடையை நெரிப்பது.

சுழித்தலாவது, சொல்லுக்கேடாய் மெய்யினைச் சுழிக்குமது.

அணைத்தலாவது, மெய்யுங் கையும் முகஞ் சொல்லுக்கேடாய் விரிக்குமது.

குஞ்சித்தலாவது, குவிக்கவேண்டுஞ் சொல்லுக்குக் குவித்தல், என, சிங்களமென்று சொல்லுமது.

சிறிதுட னிருந்து
வைத்துக் கித்துள் வாங்குதல் வகுத்தல்
மெத்தன வோடு திரிபதா கையுடன்
கனமுறச் சொப்பமோ டேந்தல்
இசையுடன் புணர்த லொன்றிவை
வைத்தவை யழகுடன் வருவ
ததற்குச் சிங்கள மென்றிசி னுரே.

ஓங்கிய உக்கிரந் துருவை யோகம்
நீங்காம லாடப் பெறவேண்டுங்—கோங்கின்
றும்ப முலைமவா யன்ன தடையாய்
சுரும்பாற் குழலினுய் சொல்.

அகமார்க்கமாடு மிடத்துக் கீதவடிவுகள் மூன்றினுலு மாடப்படும்.

கீதவடிவுகள் மூன்ருவன

உக்கிரந் துருவை அபோகம்என மூன்றிடத்து
இசையு முறுப்பு இயலுமிம் மூன்றும்
வெருபட வருத லாடலது பண்பே.

ஆடலில் நின்றவை எல்லாம்
மாயோ னுடின வைஷ்ணவ நிலையே.

குரவை, வரி, கோலம் என்று மூன்று கூத்தும் விரோத மென்று வேண்டுவர் புலவோர். இவற்றுள்,

குரவையாவது, ஸ்ரீவாசுதேவன் திருமணம் புணர்ந்த கோபாலன் கன்னியர் பதினுருயிரவருள் தம்மில் பொருந்திய கன்னியர் எழுவரு நலைவனவென்றியும், அவனின்பமும் அழகும் பாடி விநோதமாகத் தாம் வேண்டிய பண்களிலே பாடக் கையைக் கோத்து மண்டலமாக நின்று, வலக்காலை ஆலிடமாக்கி எடுத்து முன்னே குத்தியும் பின்னே புரட்டியும் ஒட்டியு மடித்தும் வாங்கி நிலத்தினு முதைத்து யிடப்பாதமும் அப்படியப்படி செய்தும், பின்பு கைகளை வக்கிரித்துக் கொட்டியுஞ் சுழன்றும், தாங்கள் வேண்டிய பலவினை கொண்டு மலை பாடி முடிப்பது.

குரவை யென்பது கூறுங் காலை
செய்தோர் செய்தகா ரியமுஞ் செயலும்
மெய்தக் கூறும் இயல்பற் றனவே
அதிகப் பொருள்பற்றி யன்றி வாராது.

வரிக்கோலமாவது, தலைவன் பிறப்பு முதலாக அவன் வென்றியும் அழகும் பாடி யாடுமது.

வரியெனப் படுவது வகுக்குங் காலை
பிறந்த நிலத்தினுஞ் சிறந்த தொழிலினு
மறியக் கூறி யணங்குந் தொழில்செயல்.

வரிக்கோலம் ; கொம்பு துருத்திக் கோலடிய மாணை பந்து விற் பத்திராங் குள்ளான் கழலாட்டு வண்டலுந்தி யோலும் அளவுமான பிழையாதபடி மன்னற் கியற்றுமது.

கோலமாவது,

புறப்புறமாகிய வெருபம் வைதான்
நாட்டி நாட்டி நமக்குடை செய்தியைக்
காட்டில் கோல மாகு மென்ப.

அவைதாம் ஒன்பதாதமும் எட்டு ஸத்துவமும் கொண்டு வருவது கோலமென்ப. ஏனெனின் ;

பந்தடி யருள வேண்டுமற முராளி
கொங்குமலை யாண்மை குந்தங் குடிப்பு
கொட்டத் திருப்புஞ் சிந்து வயிரவ
(?).............................பார்ப்பான்
சடாதாரி மறையே சோக மென்று
சொல்லப் பட்டவித் தரத்தன வொன்ப
தாதமும் எட்டு சத்துவமுக் கொற்றதானது
ஆதலது படமொழித லென்ற கோல
முற்றத் தத்தஞ் சாதித்தொழில் வழுவாதபடி
மக்கட் காகிவருவது.

விநோதக் கூத்து மூன்று மிவ்வாறே கண்டு கொள்க.

வகைக்கூத்து வருமாறு

மல்லியங் குடமால் வார்சடையோன் பாண்டரங்கம்
பல்லங் கொடுகொட்டி பாவைதிரு—வல்லாக்
கடையு மயிராணி காமன்பே டாடல்
துடையிடைசேர் துர்க்கைமரக் கால்

என்பது ;

மல்லியங் குடமா லென்பது மல்கூத்து ;

பல்லமுங் கொடுகொட்டி யென்பது பரமேச்வரனாலே யாடப்பட்டது ;

பாவை திருவென்பது பாவைக்கூத்து, ஸ்ரீதேவியாலே யாடப்பட்டது ;

அல்லாக்கடையும் அயிராணி என்பது கக்ஷிக்கூத்து, பரமேச்வரியால் ஆடப்பட்டது.

காமன் பேடா லென்பது, காமதேவனால் ஆடப்பட்டது.

துடிக்கடைசை யென்பது துடிக்கூத்து ; முருகவேளால் ஆடப்பட்டது.

துர்க்கைமரக்கா லென்பது, துர்க்கையால் மரக்காற் கூத்து ஆடப்பட்டது. இப்பதினோராடலும் இவரால் ஆடப்பட்டது.

இக்கூத்துகள் இவரா லியாதுகாரணமாக வாடப்பட்டதோ வென்னில்,

கோபாலர் மனையிலே மேவிய குரன்றும்
கஞ்சன் விடுத்த மல்லரைக் கொன்றற்
காடிய கூத்தென மொழியப் படுதல்
சான்றபழி நீங்கு
மாபினா டற்றோ ரமையுங் காலை
செயிர்த்த நெஞ்சிற் சீற்றஞ் சிறந்த
வசுரரைக் கொன்றல் காரண மாக
வந்தியம் பொழுதின் மந்தரங் குலுங்க
வாடிய கூத்தா மல்லியங் கூத்தே.

குடக்கூத் தென்பது,

கொடிபுனே மார்பின் மண்ணக மளந்த
மாயவ னண்டர் கண்கை மறுகி
ளுடிய தென்ப தறிந்திசி ளுரே.

அதுதான் ;

இடைஞ்ஞை மார்பிற் குடமது தன்னே
யெடுத்துமே............யு மிசைவுழி நிறுத்தியுங்
கடுத்தும் தோன்றியு மடுத்தடுத் தெறிந்தும்
முட்டியும் முயத்தியுங் காலுங் கையும்
போக்கிவினே கொளவு
தாளமும் கீதமும் தப்பா நெறிதலும்
மெழிலொன் றங்கையும் மாறுமிம் முறைபட்டன
செய்ய மந்தரு மருண்டு மருட்சியின்
மாண்டனர் மகளிரு மிகவும் நின்று
மாண்டழிந்து காலேயும் வளேயும் முறையுஞ்
சோர்ந்து பொறிநெறி படர்த்துக்கூத் தாகும்.

எரியி னுருவன் விரிசடைக் கடவுள்
திரிபுர மெரித்தல் காரண மாக
வரிசிலே வளேத்து வாளிமுன் கோத்துத்
தரியலர் களமா டினன்பாண்ட ரங்கமே.

அலேதரு முனிவறி யாங்க மாக
மலேபொற் சுரரை மருட்ட வேண்டி
அழகு மணியு மாடையுங் கொண்டு
வழக்கோல முரிவுட மைத்துப் பலதொழில்
விதத்தால் பயன்படப் பாட வெருங்கை
வீரு வீரைந்துதாம் வாவில்
கொன்றது கடைய மாகு மென்ப.

உமையவள் பாக மொருபுடை விளங்கிட
விமையவர் நாட்ட மிடபால் விளங்கச்
சிறுபறை யென்பது சீர்பெறக் கொண்டு
மறுவி லங்கள்மாற் ருளங் கொளுத்த
மதுவனேக் கொன்றல் காரண மாகப்
பொதுவிலத் தாடிப் புகலுங் காலே
கடிதிவன் வருதலிற் கையிற் பிடித்துக்
கொடுமையிற் கொன்றது கொடுங்கொட்டி யாகும்.

எண்ணி லசுர ரெதிற்போ வதலிறக்
கண்ணுற நிற்றல் காண்டலு
மரிது கொலவ காரணங் கூறு
துமியா மெனவல்ல நீங்கின வடிகளை
தொடுமெனப் பாவை யாசி றபயன்
படவு றுப்பி ஞற்றே
வியாட் டின்ன பாவைக் கூத்தே.

நடவா வென் றித் தாக்கின்ற
வடபா லவாய் வழிய வேண்டியக்
கடைசிய துருவுந் தொழிலுங் கொண்டு
கடைய மாடின னழனியு ணின்றே.

கோதிற பாற்சுவர் வெண்பொன் மேனுள்
மதற்கழியா மனத்தின ஞகலிற்
பெண்ண துருவு பேச்சு முடையு
நண்ணிய பின்றை நாடகங் கோத்து
வில்லும் வாளியும் வல்லிகை கொண்டு
விதியி ஞடலின் வேட்கையின் வந்த
வாதியைக் கோறல் காரண மாக
வாடினன் காமன் பேடிக் கூத்தே.

அறுமுக முருகன் பொறிமயி லேறி
சூரன் கொண்ட வீறழிப் பதற்காய்
உருவின் மாவாய் நிற்ற லிறகாய்
மொழித்துக் காந்து நின்று துடியடி
காடத் தோன்றிய பின்னை
வடுவற் கொன்றவ ஞடிய கூத்தே.

உருத்தெழுந் துடன்ற வசுரரை யெல்லாம்
செருப்புகன் றெழுந்து சிலைவல னேந்திக்
கருந்தலை யூர்தி மாயவன் முன்னின்
றருஞ்சமாற் ருவய ரந்தக ஞதிப்
பாம்புந் தேளு மாகி யாங்குமா,
வுருவே யேங்கி மேற்செல மாயம்
வேண்டுமிம்பாய் தோற்கென மாங்காலாக் கொண்டு
வருந்தோட் பைந்தோகை யுகைத்தன ளாகித்
தோள்வளை யோலிப்பக் கொடித்தோ ளாக்கி

வாளே மாய வாளாட் கண்டு
வஞ்ச மறந்துதாம் வருதனின் வாளால்
வெஞ்சின வீரரை வெட்டினன் வெகுண்டே
எனப் பதிஞேராடலும் கண்டு கொள்க.

இனிக் கூத்துக்குரித்தாகிய கால்கள் வரும்வாறு

மன்னியசீர் வைஷ்ணவம் சமநிலேயே வைகாசம்
மின்னுடைய மண்டமென் ருேதிஞர்—பன்மையா
லாலிடமெந் தான்பிறத்தி யாலிடமென் ருேதிஞர்
மேலாய் நூலோற் வித்து
காகளா றினையுமுணர் வுற்று.

அவை;

வைஷ்ணவம், சமநிலே, வைசாகம், மண்டலம், ஆலீடம், பிரத்தியாலீடம் என இவை.

சமநிலேயி ஞெருகால் பகிர்ந்து
நெளிவாய், நிற்பது வைஷ்ணவம்.

தலத்திப் பாதம் தம்மி லிசைந்து
கலக்க மின்றி நிற்பது சமநிலே.

தெளிதரு சமநிலே பகிர்ந்து முழந்தாள்
நெளிவாய் நிற்பது வைசாகம்.

பன்னிரு விரலிடை சமநிலே பகிர்ந்து
மன்னி யிருப்பது மண்டல மாகும்.

அதுவா ஞல்விரல் பற்றி நடத்தலும்
உரித்தெய்து வோயொரு கால்பக்கம் போக்கி
அதன்மெய் சாத்தலா லீடம் என்பது.

அது, பின்முன் னியற்றல் பிறத்தியா லீடம்.

அறுவகை நிலேயுங் கண்டு கொள்க.

ஒப்பாஞ் சமநிலேயே உற்கட்டிதஞ் சாரமேற்
றப்பாத காஞ்சிதமே காலுயரிற்—றப்பான்மை
வஞ்ச மருங்குல் வகுத்தன குஞ்சிப்புப்
பஞ்சதம் பரதத் தொழில்.

பார்த்த தொழிலைந்து வருமாறு

அவை சமநிலை, உற்கட்டிதம், சஞ்சாரம், காஞ்சிதம், குஞ்சிப்பு என்பன.

ஒக்க மிதித்தல் சமமாகும் ;
முன்னடி யூன்றுதல் உற்கட்டிதம் ;
முன்னடி பலகால் மிதித்தல்சஞ் சாரமே ;
எடுத்த பாதம் குஞ்சிப் பாகும்.

இனி அங்கரிக்கைகள் வருமாறு

சரிகை, புரிகை, சமகலி, திரிகை, உறைத்த கலிகை, புறட்டகம், அத்தபுறட்டகம், சுவத்திகம், உல்லோலம், குர்த்தநம், வேட்டனம், உல்வேட்டனம், தாகபனப்பிராய விருத்தம், உபாக்ஷேபணம், அபாக்ஷேபணம், நிகுண்டனம் எனப் பதினாறு பிரிவு.

சரிகையாவது, இந்தக் கூத்துகள் ஆடும் இடத்திற்குரித்தாகிய வரங்கனை சொல்லுமதும் உணர்வுற்று ;

ஆடலும் பாடலும் கொட்டும் பாணியும்
நாடிய வாங்கு சமைக்குங் காலைத்
தேவர் குழாமும் செபித்த பள்ளியு
மஞ்சாறது புள்ளும் சேக்கையும் புற்றுநீங்கி
பொற்களி யானை புறைக்கூடம் சார்ந்து
மாவின் பந்தியோ மயங்குதல் செய்யாது
செருப்பொரு மிடமுஞ் செரியும் நீக்கி
னுண்மை யுணர்ந்த தொன்மைத் தாக்கி
மதுரச்சுவை மிகுத்தாய் மதுர நாறிய
தீரு மாட்சி நிலத்தொடு பொருந்திய
வித்திறத் தாகு மரங்கினுக் கிடமே.

அரங்கி னுயரமு மகலமும் நீளமும்
பொருந்த நாடி யுரைக்குங் காலைப்
பொருந்தமண் மால்வரை சிறுகழைக் கன்றிற்
கண்ணிடை யொருசாண் வளர்ந்தது கொண்டு
இருபத்தி நாலு விரல்கொள வதனுல்

எழுகோ லகலத் தெண்கோல் நீளத்
தொருகோ லுயரத் தருபின தாகி
யுத்தர பலகையோ டரங்கின் பலகை
வைத்த யிடனிலை நாற்கோ லாகப்
பூதரை யெழுதி மேனிலை வைத்து
நந்தி யென்னும் தெய்வ மமைத்துத்
தூணிழற் பிற்பட மாண்விளக் கெடுத்து
ஈருறு நிறைந்த போர திற்கு
யிரந்தெய்தி யொன்றுட னற்ப
போர்ச்சிறு பினிலே காதிசரித் திரமும்
முட்டில் கேள்வி மூன்றரை கோடி
யொட்டிய விருடி கணங்களு முள்பட
விமையவற் கரச னிந்திரன் வலம்கொள்
தும்புரு நாரதர் தோன்று முன்கொளச்
சான்றோ ரவையும் சாருப விடம்பெற
நடுவே றெமன் திருமால் பின்கொள
மணமகள், பூமகள், மலைமகள், நாமகள்
எண்ணி நான்கு மெய்துவ நாற்றிசை
கோவு மியானையும் குரங்கும் பிச்சனும்
பறவையும் பாங்குடை புருஷா மிருகம்
யானையும் எழுதி இந்நிலம் விளங்க
பாவையா யியற்றுத்ற கரங்கெனப் படுமே.

சடம்பதினே முங்குலம் பகிந்தொரு கோலா
லதிநீ ளகலமே யாமுய்—சதுரமென
மேலேயொரு கோலளவு வீருமது பீடத்தின்
மூலைசதுர் வேக மொழி.

அம்பத்தோ ரங்குலமே அம்பத்தோ ரக்ஷரமாம்
செம்பது பீடத்தின் தேவதைகள்—சொம்புடனே
நந்தியின் விக்கிரகம் நாலிரண்டு சத்தியுட
னிந்திரனே டெண்ணப் படும்.

அகரமுத லன்பத்தோ ரக்ஷரமேல் நின்று
சிகர முடிவானோர் சேவிக்க—நிகரிலா
ஆதியக மார்க்கத்தி னுனபொரு ளத்தனையும்
நீதியுட னுடினு னின்று.

புஷ்பாஞ்சலீ லக்ஷணம்

मगणं चेन्द्रदैवत्यं (रिम्भागा) षण्मात्रं तु गुरुत्रयम् ।
आग्नेयं यगणं पंच लघुरेकः प्रयौ गुरू ॥
वारुणं तगणं पंच प्रभावेको गुरुर्लघू ।
वायुश्चतुश्च जगणं लघुर्गुरुलघुस्तथा ॥
चतुष्कुबेरं भगणं गुरुरेकं प्रभौ लघू ।
ऐशानं नगणं चैव लघुत्रयं विधीयते ॥
एवं चाष्टगणः प्रोक्तो मातृसङ्ख्यो विधीयते ।
ततस्तद्देवता वर्णास्तद्वत्पुष्पाणि चाहरेत् ॥
यथा च मातृसंख्यास्ति तथा पुष्पाणि चाहरेत् ।
शङ्खं चक्रश्च योनिं च निर्याणश्चामृतं तथा ॥
कूर्मं च धेनुं ज्ञानं च इति मुद्राःश्रुताः क्रमात् ।
एवं पुष्पाञ्जलिं कृत्वा ततो नाट्यं च कारयेत् ॥

சித்ர குண்டலி

தத்தி......ததி தொ ததக்கத் திக்கத் தோ வென்றத் தொக்கவைத்து ஆடி உற்புத புலுத பேதம் கொண்டாடித் திக்க நிறைச் சமயமாய்......அவதாகந் தூக்கி

वायोर्जानुर्वैके कृत्वादौ (?) पादाग्रं चापि संपुटम् ।
ईषन्नासाग्रदृश्यं च देहदीर्घं च तत्समम् ॥

பூந்தள புஷ்ப புடக்கரணந் தன்னில்
ஏந்திய புஷ்ப புடக்கை எடுத்தெதிர்
சேர்ந்த வரங்கமை தேவர்கள் சேவடி
யாய்ந்தலர் சிந்திமின் னஞ்சலி செய்வாள்.

தலபுஷ்ப புடக்கரணமாவது

वामे पुष्पपुटः पार्श्वे पादाग्रतलसंचरा ।
तथा च सव्यः पार्श्वे तलपुष्पपुटं भवेत् ॥

மருவுமிடத் தாளின்பின் வலத்தாள் செல்ல
வலக்கை கனிட்டன் முதலாய் வர்த்தித்
தாங்கே தெரிவ
பிறமண் டலித்து மார்பினேரே செல்ல
மிடப்பக் கமுமித் தன்மைத் தாகியுரை
இருகை தற்சனி முன்விரல்க ளெல்லா
முள்வளைய வர்த்தித்து மெய்யும் கையும் கருது
சுழிப்பாய்க் கொடங்கைக் கூடச் செறிகில்
கண்டதள புஷ்ப புடக்கரண மாமே.

புஷ்பபுட ஹஸ்த லக்ஷணமாவது

करौ भुजगशीर्षाख्यौ मिथः श्लिष्टकनिष्ठिकौ ।
स तु पुष्पपुटः प्रोक्तः प्रमाणं नृत्तकर्मणि ॥

புஷ்பபுட ஹஸ்தப் பிரமாணமாவது

चतुर्दशांगुलित्तोयं कार्यो नाभिस्तनान्तरे ।

அஞ்சலி ஹஸ்தமாவது

पताकस्तलसंश्लिष्टो भवेदञ्जलिसंज्ञताम् ।
मस्तकःस्तनमित्येवं स्थानमस्य विधीयते ॥

नर्तनं दृष्टिमात्रेण दृष्टिभाव इतीरितः ।
मस्तकस्य तु यत्कर्म शिरोभावस्स इष्यते ॥

इन्द्रियाश्वादमेतमयौ (?) मनोधर्मस्स इष्यते ।
करमात्रेण ये नृत्तं हस्तचारस्स कीर्तितः ॥

यत्केवलेन पादेन नृत्तं चारीति कीर्तितम् ।
बह्वीनामपि चारीणां मेलनं मण्डलं भवेत् ॥

यत्पादपादसहितं नृत्तं तत्करणं विदुः ।
बहुभिः करणैः नृत्तं अङ्गहार उदाहृतः ॥

अष्टाभिः स्थानकैरेभिः क्रियते नाट्यनिर्णयः ।
इतीरिता नाट्यभेदा नृत्तसागरयोगिना ॥

சேனுடர் போற்ற சிவனர் திருக்கூத்தைத்
தானடக் கண்டிமையோர் தான்மகிழ்ந்து—வானட்டில்
கற்பகக்கா வின்மலர்கைக் கரமுகில்போ லேசொரிந்தார்
அற்புதமா மீசனுக்கே யாம்.

வந்தவம் மலரை வாங்கி மணிக்கர நிறைய யேந்திச்
சுந்தரத் தேவை நோக்கிச் சுடலேயி லாடி தன்னை
முன்பெறச் சென்று நித்தம் முடிவிலாப் பொருளே யென்று
சிந்தையில் வணங்கி நோக்கி யஞ்சலி செலுத்தி நின்ருள்.

சோர்ந்தரிமல ரைக்கரத்தில் செம்புடனே யேந்தி
பாந்தன்பிறைற் பாரத்தைப் பத்தியே வருந்தியே
எத்திசைக்கு மத்தனை யியங்குபரா பரத்தை
அர்ச்சித்துப் போகவே யான்.

ஏற்றபுடம் புஷ்பபுட யியல்புறவே யஞ்சலியாஞ்
சாற்று நிலேசம நிலேயாம்—நீற்ருனர்
தம்மைத்தா மர்ச்சிக்கத் தரணியில் தாழ்சடையார்
தம்மைத்தா மர்ச்சித்தார் தாம்.

பலிகோ ணவம்பல யாபார் மீதில்
புஷ்பாஞ்சலி கொண்ட புஷ்பத்தைப் போற்றி
வலியவே தாவியே வாழச் சிறந்த
சத்த சாகரஞ் சூழப்
பூமா தேவி யேந்தினய் நீயே.

मन्दारपुष्पपरिपूर्णविचित्रगन्धं मत्तालिभृङ्गमधुरध्वनिगीतवाद्यम् ।
नानाविधाङ्गकरणैरभिवर्तमानं पुष्पाञ्जलिर्भवतु मे कमलासनायाः ।
भावानुबन्धेन रसोत्तरेण नृत्तेन नृत्तागमसम्भवेन ।
आमोदमत्तैरलिभिर्विकूजन् पुष्पाञ्जलिः स्यात् पुरुषोत्तमायाः ।
सन्तानकैः शिरसि संस्कृतरुद्रकन्या नानाविधाभिनयनैरभिवर्तमाना ।
नानाप्रसूननिचयैः नृपराष्ट्रवृध्यै पुष्पाञ्जलिर्भवतु मे परमेश्वरायाः ।

சேனு லாவிய தாள சற்பிதா புத்தி ரங்கள் சிறக்கவே
காண நின்றுத ருசி போத (வோதவே) கண்ட சுத்தி
[விளங்கவே

பாணி மீதெழு பங்க யங்கொடு பானு வேடிவ தன்னிலே
வாணி வேதனுர் பாத பங்கயம் வணங்கு மஞ்சலி காணுமே.

பண்ணி லாயி லிறங்க தாளமே பங்கயங்கள் சிறக்கவே
எண்ணு நட்டுவ தாள மொத்தவே யின்ப மாய்வரு மளவிலே
வண்ண மேவிய துளப மாலிகை வளரு முச்சியில் வருமுதற்
கண்ண பரகோ பால ரிடமகள் கண்ட அஞ்சலி காணுமே.

கொந்து பந்து முகாரி நல்லிசை கோகிலப் பிரிய தாளமே
முந்து கற்பக மலரை வாண்மைசேர் முளரி யங்கை
[யினிக்கொடு
அந்த மாகவே அருண னேகிய வந்தி மாலேயி லன்புடன்
இந்தி ரன்தனே இந்தி ராணி இறைஞ்சு மஞ்சலி காணுமே.

அரிய சங்கரா பரண விசைமுதல் ஆதி தாள நடக்கவே
மருவு கொன்றையோ டறுகு கூவிளே வளரெ ருக்கின்
[மலரினேக்
கரிய மாமுகில் வண்ண னுெரொடு கமல வானவர் காணவே
இருளி லீசரை இமய மாமயி லிறைஞ்சு மஞ்சலி காணுமே.

भरतकुलभाग्यकलिके भावरसानन्दपरिणताकारे ।
जगदेकमोहनकले जयजय रङ्गाधिदेवते देवि ॥

சாலி

अष्टापि पंच दश च द्विपार्धं चत्वारि षण्णून तद्यमर्ध्यम् (?) ।
अर्धांश उपांशतिरेव वद्वादशी च जर्जस्वय एव शालि (?) ॥

எட்டஞ்சு பத்து வட்டமிக் கையுமவ்
வட்டம்மட் டணையாநாற் பத்தாறு—தீமுட்ட
ஒத்தி எரிக்கழிக்க இருபத்து மூன்ருறு
ஆறுமூன் ரும்சாலி யாம்.

செலுத்தின வடியை வாங்கிச் சீரடி யொதுக்கி மிக்க
நலத்தினு லிட்ட வட்ட மண்டல மாறுங் காட்டிப்
பலத்துட னான்கு பேதம் பிழைவாரா தியற்றி யெங்குந்
தொலித்த தோமுக சாலித் தொழில்தனே விளம்ப
[லுற்றேன்.

சாலி யுணர்ந்து முகசா ளயம்பற்றி
நாலுவகைக் கையும் நலம்பெறவே—மேலுமினி
அட்டகோ ணந்திசைக ளாலும் நிலத்தில்
முட்டமுட்ட முகசா ளயம்.

॥ अङ्गोपाङ्गप्रत्यङ्गानि ॥

चत्वार्यङ्गानि नृत्ते तु शिरो नेत्रे करौ पदौ ।
उपाङ्गान्यधरः पार्श्वौ भ्रुवो वक्षस्तथा कटिः ।
प्रत्यङ्गान्युदरं पृष्ठं नासेति त्रितयं सखे ।
इति द्वादश लक्ष्यन्ते प्रधानं नृत्तकर्मणि ॥

சீர்மிகு கண்கை காலாந் திறத்தினை நான்கு மங்கும்
உரையிதழ் புருவம் பக்கம் ஒக்கலை யுபாங்க மாகும்
முருகிதழ் நாசி யுந்தி முதுப்பிட்டம் பிறத்தி யேயாம்
மருவிய நிறத்த துக்கு வாறிவை யாது முண்டே.

சிரோ பேதம்

आकंपितं धुतञ्चैव विधुतोद्वाहितं तथा ।
अधोमुखं परावृत्तं लोलितं चाञ्चितं तथा ॥
परिवाहितमित्येवं नवधा कथितं शिरः ।
आकंपित शिरः प्रोक्तं ऊर्ध्वाधोन्नमनं शनैः ॥
वामदक्षिणगे शीर्षे शनकैः स्याद्धुतं तु तत् ।
तदेव शीघ्रचलनात् विधुतं प्रोच्यते बुधैः ॥
उद्वाहिताधोमुखाख्यौ ऊर्ध्वाधोगमनागमे ।
पराङ्मुखं परावृत्तं लोलनाल्लोलितं शिरः ॥
सकृदंसे स्थितं न्यस्तं पर्यायात्परिवाहितम् ।
त्रयोदश शिरोभेदाः अधीताः पूर्वसूरिभिः ॥
चतुर्णामुपयोगित्वान्नाट्ये नृत्ते नवोदिताः ॥

என்றது.

ஆகம் பிதமே யணிசிர மேலே
ஏகு மேல்கீ ழிருகா லசைத்தல்
உரைசெயி லிதன்ருெழில் ஒன்றைக் கேட்டல்
தருமுப தேச சமதா விலக் குறிப்பிவை.

கம்பிதமாவது கருதிப் பலகால் விளம்பவதாம் ;

மேம்பட வசைத்தல் வேண்டும் விசாரம் ;

மிகவே யறிவு பூண்டு மறுத்தல்
புகல்வினை யோகம் ;

தூதமது வதனம் சுற்றி லிதன்ருெழில்
விதமிகு தடுத்தல் வெய்ய கோபம்.

பக்கம் பார்த்துப் பண்புடன் விசைப்பு
மிக்க நிருத மெனவிளம் பினரே.

விதூதம் பாங்கம் மேம்படப் போக்கல்
வந்தனைப் பலகால் வன்பட்ட வசைத்த
சீதம் பயமே வெறுப்பு
கொப்பிதம் பெறக்காட்டல் எனவிளம் பினரே.

பரிவாய்ச் சிரம் பக்கம் போக்கல்
விரைவுடன் புலிதல் விளம்பல் மார்க்கம் ; என்றவாறு.

படைத்தான் படைத்தன்ன மாத்திரையைப் பாங்கா
யடைத்தெய் மைத்திபற்று மாலோன்—மடக்கொடியாய்
வீடானுர் விடாம வரிகடையோன் மெய்ப்பொருளை
யாடினு ளுதியாய் நின்று.

மாத்திரைக ளெல்லாம் நான்முகனுலே படைக்கப் பட்டன.

தாள முழவங்களும் தம்மில் கிரியைகளும் பொருந்த திருமாலால் சேர்க்கப்பட்டன.

பரமேச்வரன் மாத்திரைகளையும் பலகிரிகைகளையும் தமக்கு அங்கமாகக் கொண்டாடினுர் என்றவாறு.

ஓங்கு புகழீச னுயர்விதமாய்க் கொண்டாடிப்
பாங்கினிசை நாரதனுர் பாடுதலும்—பூங்குழலாள்
பாணி யியற்றினு ளன்ருன மணிவரையில்
வீணை யியற்றிய வேந்து.

கூத்தினை ஆடினன் பரமேச்வரன். இக்கூத்திற்குப் பாடினன் நாரதன். பாணியியற்றினள் கௌரி. பொதியின் மலையிலிருந்து வீணையியற்றிய அகஸ்தியன் பணித்தானென்றவாறு.

மண்டல மாறுக்கு வீணைக் கிரிகைகள் வருமாறு.

சமநிலையில் ஒருகால் பகிர்ந்து நெளியாய் நிற்பது வைஷ்ணவம்.

एकस्समस्थित:पाद:ऽयश्र: पक्षस्थितोऽपर: ।
सार्धद्वितालान्तरालो जङ्घा किंचिन्नता भवेत् ॥
सौष्ठवं यत्र तज्ज्ञेयं वैष्णवं विष्णुदैवतम् ॥

தலத்தில் பாதம் மந்தமில் நயந்து
கலக்க மின்றி நிற்பது சமநிலை.

தெளிதரு சமநிலை பகிர்ந்து
நெளிவாய் நிற்பது வைசாகம்.

பன்னி விரலி டைப கிர்ந்தும்
நன்னி யிருப்பது மண்டல மாகும்.

அதனால் விரல் பற்றி நடந்து
அதுவே யொருக்கால் பக்கம் போக்கி
அதின் மெய்சாய்த்த லாலீடமாம்.

அபினமுன்னியற் பிரத்யாலீட மென்றவாறு.

நிலைகள் ஐந்தும் வரும்வாறு

[அவை] சமநிலை, உற்கட்டிதம், சஞ்சாரம், காஞ்சிதம், குஞ்சிப்பு ; [என்பன.]

ஒக்க மிதித்தல் சமமாகும்.

முன்னடிப் பூணாத லுற்கட் டிதமாம் ;
தம்முடி பலகால் மிதித்தல் சஞ்சாரம் ;
எடுத்த பாதம் குஞ்சிப் பாகும் ;
என்றவாறு.

ஆடலின் நிற்பவை யெல்லாம்
மாயோ னாடிய வைஷ்ணவ நிலையே.

இயலிசை நாடகமாவது

இயலாக அழகுடனே இசையடைந்து பொருந்த நாடகம்; நாடகம் நடிக்க இயலிசை நாடகமாம்; இயலாக லோகத்திலே சுவபாவமாக உண்டானதை ராகத்துடனே நடிசுரம் பண்ண...

<table>
<tr><td>o</td><td>1</td><td>1o</td><td>4</td><td>o4</td><td>த</td><td>oத</td><td>த</td><td>o | த</td></tr>
<tr><td>டத</td><td>oடத</td><td>தத</td><td>க</td><td>2</td><td>3</td><td>6</td><td>1o</td><td>19</td></tr>
<tr><td>33</td><td>6o</td><td>16</td><td>191</td><td>34o</td><td>6o</td><td>1</td><td>2</td><td>5</td></tr>
<tr><td>1o</td><td>32</td><td>44
உபரி</td><td>91</td><td>18o</td><td>BM 58</td><td>998</td><td>த34o</td><td></td></tr>
<tr><td>ஷஷ
o</td><td>சதுர்
த்த</td><td>உபங்
யா</td><td>அங்ய</td><td>oதத</td><td>| தத</td><td>o | தத</td><td>டதத</td><td></td></tr>
<tr><td>த89</td><td>த95o</td><td>ரு
த485</td><td>6த
ஊ
36</td><td></td><td></td><td></td><td></td><td></td></tr>
<tr><td></td><td></td><td></td><td></td><td></td><td></td><td></td><td></td><td></td></tr>
</table>

सिंहनन्द: कोकिल: पालकहतौ केकलापि लयेव च (?)

पाकलिलावहं (?) स श्चासिंहान्तश्च नामनन्द च

ட ட | த | ட o o ட ட | த | த ட | | +

कूल: कपालकन्द्वो लोपालोप: कलावुभौ

काकश्च हंसपादश्च सिंहचूडामणिस्तथा

| ட | த | ட o o | த | த ட | | + +

सिहचूडामणि: पूर्वो फाल स (?) गोक्दुमगणं नगणं तथा ।

हंस त्यदैश्चदैवं (?) प्लुतसिहं च नाम च ॥

द्रु द्रु द्रु ।।। ∟ ∟ ० ० ∟ ∟ ∟ ।।। +

प्लुतसिंहश्च द्वौ लौ द्वौ गुरू द्वौ च दत्रयः ।

प्लुतास्त्रयो गुरूलोक लीलातु (?) हंसश्चाद्रुत सिंह तु नाम च ॥

० ० ।। ∟ ∟ द्रु द्रु द्रु ∟ ∟ ∟ । ∟ ।।। +

द्रुतसिंहं लु द्वौ गुरू त्रयो लोपः पद्रूलः ।

गुरूस्त्रया लीला च हंसपादश्च प्रतापसिंह च नाम च ॥

।। ∟ ∟ ∟ । द्रु द्रु ० ० । द्रु ∟ ∟ ∟ ।। +

प्रतापसिंहो नन्दन् लघुष्षन् च तु लघुष्षन् (?) च द्रुतत्रयः ।

प्लुताश्च हिहंसपादश्चैक एव एतन्मदनसिंहकः ॥

।।।।।। ∟ ∟ ∟ ∟ ∟ ∟ ० ० द्रु द्रु द्रु +

मदसिंहन् नन्दन् तगणं प्लुतलोकेदु इकालापोर इलोद्वयं हंसपादो वीरसिंह इति नाम प्रकीर्तितम् ।

∟ ∟ । द्रु । ∟ ० ० ∟ । द्रु । ∟ । ∟ द्रु ।। +

वीरसिंहन् लघुद्वौपो मगणमपः भगणं द्रू इद्वौयिकुलीपाक लोकं सपदश्च इत्येवमानन्दसिंहः ।

।। द्रु ∟ ∟ ∟ द्रु ∟ ।। ० ० ∟ । द्रु ∟ । +

आनन्दसिंहन् भगणं च श्च विभवृत्ति पूग पूग पूग श्च हि द्रुतद्वौ हंसवादश्चानन्दसिंहश्च नाम च (?) ।

∟ ।। ∟ ।। ∟ ।। ∟ द्रु ∟ द्रु ∟ ० ० +

वादश्च गोपालसिंहनन्दं च नाम च ।

द्रु ।।। द्रु ।।। द्रु ∟ ∟ ∟ ० ० ∟ ∟ ∟ +

गोपाल सिंहन् लयं तगणं मनम द्वौ द्रुतश्च हि हंसपाद श्च विकृतसिंहनाम प्रकीर्त्यते ।

द्रु द्रु द्रु ।।। ∟ ∟ ∟ ।।। ∟ ∟ ∟ ० ० +

विकृतसिंहन् मुद्रद्वौ मवलौ द्वौ पः ललापश्च ललश्च हि हंसपाद इति
रव्याता (?) मेरुसिंहं च नाम च ।

ட ட ட o o ட ட ட த I.I த I I த I I + .

मेरुसिंहन् तपद्रू इद्वौ च पोश्च ताल दशूल (?) सिंहका एतन्नाम प्रकीर्त्यते ।

ட ட I த o o த I ட ட o o I I த II ட ட +

शूलसिंहन् सवोदूत द्वौ वकुरु लोकि . . . . . . (?)

..............................து தான
மறைப்படி லீலை வசைநாட் டியத்துச்
சிறப்புட னிருத்தஞ் செப்பினர் தானே.

ஆதூதக் கையா வதூதந் தானணி
சிரமொரு லுபமையில் வீழ்த்த விதன்ஞெழி
லுரைக்கில் மாரிச் சந்தேகம் வாகன
முதலா னவையே யேறு
மிவற்றி லிகல்நாட் டியத்திற்
கூறினர் பரதக் குறியுணர்ந் தோரே.

ஒளித மஞ்சிரம் பலபக்கம் போக்க
லாளு மவத்தை யதிருங் கோபம்
பிணியாத் தோன்றும் பெரிய மூச்சினே
அணிதரு நாட்டிய மாகுமென் றனரே.

நிகுஞ்சிதங் கந்தரம் நிகரிற் றேளுடன்
தகும்படி செறிந்து தன்மையோ டேந்தல்
விளையாட் டுடனே விலாயஞ் செருக்குக்
கிளிகிஞ் சுகமே அருணன் அபிமானம்
புலவி காட்டும் பொருந்து மருதங்
கலவி காட்டுங் கருதுங் குறிப்பே.

ஸாஞ்சிதம், வராவுக்தம், அதோமுகம், ஊர்த்வமுகம், பார்ச்வ முகம், திருஷ்டக்கிரமம், ஆலோகிதம், ஸமம் ;

सममालोकितं साचि प्रलोकितविलोकिते ।
उल्लोकितानुवृत्ते च तथा चैवावलोकितम्

इत्यष्टौ दृष्टिभेदाश्च तेषां लक्षणमुच्यते
आलोकितं भवेत् शीघ्रं व्याकोचस्फुटवीक्षणम्
वीक्षणं सुरनारीवत्सानन्दं सममुच्यते
स्वस्थानस्थापितमुखं साची तिर्यग्विलोकितम्
प्रलोकितं परिज्ञेयं दर्शनं पार्श्वभागयोः
वीक्षणं पक्ष्मभागे च तद्विलोकितमुच्यते
उल्लोकितमिति ज्ञेयं ऊर्ध्वभागविलोकनम्
अनुवृत्तं मतं यत्तद्भूयोनिरीक्षणम्
अधस्ताद् दर्शनं यत्तदवलोकितमुच्यते
दृष्टीनां षोडशो भेदः रुचितालरसादिधिभिः

இரதக் கண்கள் எட்டே யுரைக்கில்
விரவு காந்தை மேவுப் பாநிகை
முறுவல் நகையே மெய்கொள் கருணையின்
மறியற் புதம்வாய்ந்த வாய்ந்த வீயேம்.

உருத்திற முடனே யொள்ளிய பச்சை
பரித்த ெ............ரிதன் பண்புகூறு வோமே.
என்பது சூத்திர மென்னில்.

இரசத்திரட்சி எட்டு

காந்தம்பாநிகை, கருணை, அற்புதம், நகை, வீரம், உருத்திரம், பீபத்ஸம், என இவை வரும்வாறு.

காந்தைக் கண்ணே கருவிக் கலக்கம்
வாய்ந்த தெளிவுடன் வன்புரிக் கெவையேயதிய
தாரை இயலுங் காட்டல் துயதால்
பக்கம் பயத்தால் மீளுதலெண் ணினரே.

கருணைக் கண்ணே கருவிழிக் கலக்கம்
விரவி யலைந்து மேனிகை கவிழ்ந்து

கலங்குஞ் சோரும் காட்சியோ டோங்கும்
மிலங்கிப் பிரிந்தே இயல்நுனி நாசி
பார்த்து மகிழ்ந்திப் பகர்க்கரு விழியைச்
சேர்த்து மறிந்து திகழ்பொரு ளொன்றை
காணு நிருத்தங் கருதி வளைந்து
பொருவிற் கருவிழி யுள்ளும் புறம்பு
மாக வுலாவி மெள்ளப் பார்த்தும்
மேதகு கண்கள் வாய்ந்த குழையே
கோடி மறந்த ஆய்ந்த
வாய்ந்தவர் தன்னி லாகுமென் றனரே.

நகைக்கண் ணிமைக்கண் நலமுடன் மந்தல
தகைப்புடன் மிதிமந் தாமி தன்றெழில்
தன்னி லிடைவிடா தாக்கி வளைந்து
மன்னும் சுழிச்சி வாய்ந்த செறிதை
யுள்ளே பார்க்கி லுயர்தரு விழிதான்
தெள்ளிய வாகு மூலஞ் சேந்து
விழித்த லிமைத்தல் மேவுமென் றனரே.

வீரக் கண்ணே மிகவரு வருபால்
தீப்பொ ருள்களைச் சொல்லா தாகில்
சலியாய் வாயமூதம் தானுட நீட்டு
மலிவார் பொருளென வகுத்துரைத் தனரே.

உருத்திரக் கண்ணே உயர்பல பொருள்களை
விரிப்பது போல விலகுபா டலத்துடன்
பொருந்த வட்டமாய் புழுதியுற் றதுபோல
புழுதி யாலும் புருவங் கிளைந்து
மிதியி னுலு மவன்பால்
தன்மைத் தோன்றுந் தத்தியென் றனரே.

பீபற் சம்மே தன்தொழி லிதுவகை
இருமுறை வைத்த மிவைதனஞ் சற்றுங்
கம்பனம் வினிகூக மேம்பட நிற்றல்
விதூத மேவி நிவிர்த்தம் நிமிக்கு
நயம்புகான் மூடினே புகலுமிவை விருத்தம்
மிக்கவுத்து வாயித மெனவிளம் பினரே.

விதூத மதிருயக் காமுகம் விடுதல்
கதிகொள் தடைவீடு காட்டுமென் றனரே.

வினிவிருத் தந்தான் வெய்விருத் தந்தான்
பணிகொ ளல்தன் பரிந்துள் வாங்கல்
பழமுடன் பொருமை பண்பில் கோபம்
பழுக்கா யிவையறி விக்குமென் றனரே.

ஹஸ்த லக்ஷணம்

बाहुमूले स्थितो ब्रह्मा बाहुमध्येतु केशवः ।
बाह्वग्रं रुद्रदैवत्यं कूर्परे तु महेश्वरः ॥
सदाशिवं मणेर्बन्धे अंगुष्ठे तु विनायकम् ।
तर्जन्यां षण्मुखश्चैव मध्यमायां तु भास्करम् ॥
कन्दर्पोऽनामिकायां तु कनिष्ठायां बृहस्पतिः ।
चन्द्रमास्तलमध्येतु दीर्घहस्तस्य लक्षणम् ॥

நேரென்கிற உறுப்பிற்கு லக்ஷணம்

समं नृत्तं तदानन्दि चतुष्षष्टिकरान्वितम् ।
अष्टमण्डलसंयुक्तं अष्टदिक्ष्वपि चाष्टकम् ॥
आदिताळलयज्ञाननर्तनं समनर्तनम् ।
चतुरास्यकरेणापि बहुभूषणबन्धनम् ॥
सन्नृत्तममितं मुख्यं भरताचार्यसम्मतम् ।

நேரென்கிற உறுப்பிற்கு அஷ்டமண்டலம்

எட்டெட்டுக் கொப்பாக அறுபத்துநாலு கொப்பும், அறுபத்துநாலு கையும் ஆதிதாளத்திலே லயமாக நர்த்தனம் பண்ணில், சதுரச்ரகரத்தினிலே புறத்திருபத்கட்டனரே.

पताकहस्तसंयुक्तं मिश्रनृत्तं प्रकीर्तितम् ।
लघुशेखरतालञ्च कारणं सप्त नृत्तवत् ॥
विलम्बितक्रमादत्र बर्हिभूषणबन्धनम् ।
कलितारव्यकरं कृत्वा प्रवृत्तिभ्रमणं च तत् ॥

எடுக்கையிலே தகபிறமும் சிகரமுமாக மத்யத்திவை கிருத்தச்ர நிருத்தம்; எழுவிடத் தீவிரமாக லயிக்கப் பண்ண வலிறெஸ்தத்திலே ரேகைப் பிரமாணம்; ஸஹிதமாகப் புத்திருப்புக் கட்டக் கரணம்.

இதுக்குத்தாளம் டொம்புலியுமாம்.

चित्रनृत्तं च संचारं डोलाय चतुरश्रकम् ।
व्यावृत्तिनृत्तसंचारं त्रिधातालेन तल्लयम् ॥
चतुरश्रकरं कृत्वा वहिकः पुस्तलस्य हि (?) ।
हंसपादो भावसिंहः इतिनाम प्रकीर्तिता ॥

। । த ० ० த । । ட ட த ட ட । । +

भावसिंहन् तपस्तपो . . . . . . द्रुद्वयौ लघुद्वयं हंसपादो मूलसिंहः इति नाम प्रकीर्तिता ।

த த ட ட । த ட ட । த । ० ० । । +

मूलसिंहन् ननपपपो द्रुद्वौ च मगणं मगणं च हि हंसपादो जगत्सिंह इति नाम प्रकीर्तिते ।

। । । । । । த த த ட ட ட ட ட ட +

जगत्सिंहन् पापो गुरुद्वौ लघुद्वौ पः लद्वौ गुरुद्वौलयडणं च हि द्रुद्वो हंसपादश्चैवास्तु सिंहं च नाम च ।

த த ட ட । । த । । ட ட । । ட ட ० ० +

वासुसिंहन् मगणं गुरुद्वयं पद्रे नलद्रू इलोपद्रू ।
ल च हंसपादो वल्लसिंह इति नामोच्यते बुधैः ॥
ட ட ட ட ட த த | | | o o | த ட | +

वल्लसिंहन् तलौपघमगणं मगणं काकपादौ ।
षड्द्रुतास्यविरामस्य सिहल्लजिवस्तथा ॥
ட ட | | | த த ட ட ட | | | + + o o o o o o

एते द्वात्रिंश सिंहाश्च द्रूते लघुगुरुप्लुतः ।
द्वात्रिंशन्मात्रसंख्या च वर्तते भूसुराविधु ॥
पतयपपगभागोगो पपातायपद्वौ ककूकलकू ।
कपै चत् चकतालं च नाम च ॥
த ட ட | | ட ட த த ட ப் | | ட ட த த ட ட ட | | ட ட த த ட ட | | க க த —

பிரம்புக்கு லக்ஷணம்

षट्त्रिंशदङ्गुलं दैर्घ्ये पञ्चपर्वयुतं दृढम् ।
कनिष्ठांगुलिवत्सूक्ष्मं ग्रन्थिरन्ध्रैश्च वर्जितम् ॥
एतेषु देवताः प्रोक्ताः क्रमेण भरतादिभिः ।
प्रथमं चन्द्रदैवत्यं द्वितीयं रुद्रदैवतम् ।
तृतीयं विष्णुदैवत्यं चतुर्थं ब्रह्मदैवतम् ॥
पञ्चमं सूर्यदैवत्यं एतद्वेत्रस्य लक्षणम् ।
ताण्डवानि पुरा रुद्रः षोडशानि ननर्त च ॥
ऊर्ध्वताण्डवनृत्यं च नर्तयामास पद्मभूः ।
धृत्वा ऽसव्यकरे वेत्रं प्रहर्षोत्फुल्लमानसः

என்றது முப்பத்தாறு அங்குலப் பிரமாணத்தில் அஞ்சு கணு வாகிச் சிறுவிரல் பருமனுய்க் கிரந்தி ரந்திரங்களில்லாத பிரம்புக்குத் தேவதை முதல் கணு இந்திரன், இரண்டாங் கணு ருத்

திரன், மூன்ருங்கணு விஷ்ணு, நான்காம் கணு பிரம்மா, ஐந்தாம் கணுக்கு ஸூர்யன் தேவதை: இப்படிப்பட்ட பிரம்பை பரமேச்வரன் ஷோடச தாண்டவம் ஆடி அருளுகையில் ஊர்த்வ தாண்டவத்தில் பிரம்மாவானவர் ஸூசி முகத்திலே பிரம்பெடுத் தாட்டுவித்தாரென்றவாறு. இதொருபடி.

மூலமாதி வேதா தண்டுமஹா விஷ்ணு
ஓல முள்ள ருத்திரனே மேலே
யெழுந்த விலேமா யோச்வர மெய்தநிறக்
கொழுந்து சதாசிவமே கூறு.

கூறும் பிரம்பதனைக் கொண்டாட் டவிக்கவென்ருல்
வீருமது மூன்றரைச்சாண் விற்பனமா—யாறே
ழுங்குல மேயாகு மளவடி தலேயீ
ரங்குலமுள் ளஞ்சுகணு வாம்.

அஞ்சுகணுவி தெய்வமா மளவிலே பார்க்கில்
பஞ்சபூ தத்தைப் பகர்வதே—விஞ்சுமது
அத்தன் பொரியரவை யானமுனிக் கன்றளித்தான்
பெத்தமது தாளுக வே.

தாளுகு மைங்காணு மந்தாண்டும் யிவர்க்கன்றும்
நாளு கமளுன நந்தியுடன்—ஆனதொரு
விந்துவுட னம்காளி வேத்தமதில் தெய்வம்
அந்தத்தி லாடியே யாம்.

ஆதி யனந்தனுகத் திலாதி யனந்தனுக்
காதி யனந்தநிர்த்த மாடவே—நீதி
அடுத்த துருவாசன் அரன்குற்ற மில்லாதே
எடுத்த பிரம்பே இது.

அச்சமற வாதிநின் ருட்டியதோர் தாண்டவத்தை
மெச்சவே பின்நின் ருட்டுவிக்க—நிச்சயமே
முச்சா ணரைப்பிரம்பு முதற்குருவா மும்மூர்த்தி
சத்தாக வித்தகத்தைத் தாக்கு.

தாக்கியதோர் தான்பிரம்பைத் தான்பாதியா னக்காவல்
வாக்கில் பிடித்து வளமாக—நோக்குடனே
ஆனபர தத்தொழிலே ஆட்டுவித்து ஆடவல்லார்
தா[ன]றிந்த கைப்பிரம்புதான் பிடித்து.

ஆடிநின்ற தாக்கும் பரதப் பிரம்பில்
ஊன்படுத்து மிரண்டங்குலங் குறைந்தால்—மான்விடுத்த
கண்ணியே கைப்பிரம்பிற் காலங்குல மேறில்
கண்ணியே சாவுடென்னும் படிகேளு—மெண்ணஞ்சு

ரெண்டுவிரல் பன்னும்பா தப்பிரம்பைப் பற்றினல்
இங்நிலத்து வானந் தழைக்கும்—வையக
மேலாம் வாழ்வுமிக வுண்டாகுங் கோளந்
தழைக்கு மென்றே குறி.

குறித்த பிரம்பின் குலதெய்வந் தன்தெய்வ
மறித்தெடுத்த கைக்கு வடிவுசொல்லி—லிறுக்கிப்
பிடித்தகரஞ் சூசி தோல்பிரம்பே பாம்பு
எடுத்தவனும் துருவாச னென்.

आनन्दताण्डवं सन्ध्याताण्डवं च ततः परम् ।

गौरीताण्डवं चाथ त्रिपुरताण्डवम् ॥

कालिकाताण्डवञ्चैव मुक्तामाणिक्यबन्धनम् ।

इत्येवं तत्र नृत्तं स्यात् भरताचार्यसंमतम् ॥

வித்ரமென்கிற உறுப்பிற்கு

டோல சதுரச்ர ஹஸ்தமாய் வியாவிருத்த நிருத்த ஸஞ்சார கிரீடா தாளத்தில் லயமாக நர்த்தனம் பண்ணில் வித்ர வுறுப்பு.

அங்ய சதுரச்ர கரத்தினல் புறத்திருப்புக் கட்டவும்.

चित्रनृत्तं प्रवक्ष्यामि प्रतिपाद्य पताकया ।

व्यावर्तनेन संचारं मल्लिका मोदतालका ॥

चतुरश्रकरं कृत्वा बहिर्भ्रमणचङ्क्रमात् ।

एते हि चित्रनृत्तस्य भरताचार्यसंमताः ॥

சித்ரமென்கிற உறுப்பிற்கு

டோல சதுரச்ர ஹஸ்தமாயும், வியாவிருத்த நிருத்த ஸஞ்சாரமாயும் பதாக தாளத்தில் லயமாக நர்த்தனம் பண்ணில், சித்ர உறுப்பு. அங்ய சதுரச்ர கலிகா மோதிரத்தினுல் திருப்புக் கட்டவும்.

नत्तनृत्तसमारम्भे करं डोलासमन्वितम् ।

चतुरश्रं भवेत्साया व्यावर्तो न चतुः क्रमात् ॥

समताललयामिश्रं तन्नृत्तं नत्तनर्तनम् ।

चतुरश्रं करं द्वाभ्यां समन्तं नृत्तवेदिनाम् ॥

நத்திர உறுப்பிற்கு

ஆரம்பத்தில் டோல சதுரச்ரகரமும், சதுரசிராங்கத்துடனே கூட ஸம தாளத்தில் புறத்திருப்புக் கட்டவும்.

स्कन्धकूर्परहस्तेन द्रुतताललयान्तिम् ।

व्यावृत्याया नृत्यानां वर्णावयवसंज्ञकम् ॥

चतुरश्रकरं कृत्वा पृष्ठचक्रं च पादकम् ।

इत्येवं नर्तनादीनां भरताचार्यसम्मता ॥

என்றதற்கு, ஸ்கந்த கூபர ஹஸ்தத்தோடே கூடத் துருத சேகர தாளத்தில் லயமாக வியாவிருத்தா ஸஞ்சரிக்கில் வென்னத்துறுப்பு. இது சதுரச்ர கரம், பிரஷ்ட சக்கிர பாதமாய்ப் புறத்திருப்புக் கட்ட வென்னுரங்கம் ;

तालावयवनृत्तं च डोलायचतुरश्रकम् ।

हस्तव्यावृत्तनृत्तं हस्ततालपञ्चकम् ॥

भ्रमणं उरुपादेन रम्यमेनं च हस्तकम् ।

चतुरश्रमिति प्रोक्तं एतत् तालं सनृत्तकम् ॥

தாளத்துறுப்பிற்கு

இதற்கு ஹஸ்த சதுரச்ரத்துடனே புறத்திருப்புத் துடையின் பேரிலே (கலேங்திக்) கட்டவும்.

जात्यमानर्तनं यस्मात् एकं च कटकामुखम् ।
दक्षिणं चादितालेन चतुरश्राङ्गसंयुतम् ॥
व्यावृत्तनर्तनं सर्वं बहिर्भ्रमणबन्धनम् ।
चतुरश्रं करं कृत्वा भरताचार्यसम्यता ॥

சாரூபமானத்திற்கு வலக்கடகா முகமு மிடக்கை தொங்க விட்டு வியாவிருத்தா நர்த்தனமான லகுசேகர தாளத்தில் சதுரச்ராங்கத்தினல் ஸஞ்சரித்துப் புறத்திருப்புக் கட்டவும்.

कत्रनृत्तं समस्कन्धे कूर्परं हस्तकारकम् ।
ञ्यावृत्तनर्तनं तालं प्रतितालः प्रकीर्तितः ॥
भ्रमणं पादे पुरः चक्रं चतुरश्रकरान्वितम् ।
एतेषु कत्रनृत्तं स्यात् भरताचार्यसंमता ॥

கத்திரத்திற்கு

ஸமஸ்கந்தமும், கூபரமும், வியாவிருத்தா நிருத்தா ஸஞ்சாரமும், பிரதி தாள லயத்தில் நர்த்தனம் பண்ணுவது கத்திரம். புறத்திருப்பு சதுரச்ரமும் கரபுறஞ் சக்கரமும் பண்ணக் கடவன்,

प्राचुरनृत्तं संभाव्यं समस्कन्धकरान्वितम् ।
कूपरं नृत्तव्यावृत्तं संचारस्त्वादितालकम् ॥
भ्रमणं चतुरहस्तं तु भ्रमणं बहिरन्वितम् ।
पूर्वाचार्यादिकैः प्रोक्तं भरताचार्यसंमतम् ॥

பாசமென்கிற உறுப்பிற்கு

ஸமஸ்கந்த கூபர சதுரச்ராங்கத்துடனே வியாவிருத்த நர்த்தன ஸஞ்சாரம் பண்ணில் பாசம்.

क्रियानृत्तं समस्कन्धं कूर्परं चतुरश्रकम् ।
व्यावृत्तनृत्तसञ्चारं तालेनाथ द्वितीयकम् ॥
चतुरश्रकरं कृत्वा भ्रमणं च बहिस्समम् ।
इत्येवं नर्तयामास क्रियानृत्तं तदुच्यते ॥

தோலென்கிற உறுப்பிற்கு

ஸமஸ்கந்த கூபர சதுரச்ராங்கத்துடனே திவித்யக தாளத்தில் வியாவிருத்த நர்த்தநம் பண்ணி சதுரச்ரகரத்துடனே புறத்திருப்புக்கட்ட தொழில் ;

पताकोन्नतनृत्तानां तालस्तालस्तदीपिकम् ।
समस्कन्धस्य कूपरा चतुरश्रकरान्वितम् ॥
नृत्तं बहिर्भ्रमणं स्यात् चतुरश्रकरान्वितम् ।
द्वादशोहस्त नृत्तं लयहस्तपताकया ॥

ஒயிலென்கிற உறுப்பிற்கு

தாளம் தீபகம். இதனுல் வியாவிருத்த நர்த்தனம் பண்ண ஒயில். இனி மூவகைக் கூத்தும் வரும்வாறு :

தேசி, வடுகு, சிங்களமென் றேதினுர்
பேசிலிவை பிஞ்ஞகனு ராடியே—ஓசையா
லொத்து டன்பா ணியுட னேங்கு
வைத்துமூ லாய்வந் துறும்.

ஏனெனின் நிருத்தம் மூன்று வகைப்படும்.

அவை தேசி, வடுகு, சிங்களம் என்பன. இவை கொட்டுடனும் பாணியுடனும், இசையுடனும், பொருந்தி இவற்றுள் முதலாய் வருமென்றவாறு.

வண்மை வடுகாகும் மேன்மையே சிங்களமாஞ்
சொன்னசம் மேனகத் தேசிகத்தை—நன்னுதலாய்
தத்தந் தொழில்திரிகை தாமமைய ஆடுவரே
மெத்தவகைக் கூத்தாம் விளம்பு.

வடுகு வண்மைக் கூத்து; சிங்களம் மேன்மைக் கூத்து; தேசி மத்திமக் கூத்து.

இவை ராஜஸம், தாமஸம், ஸாத்வீகம், நிறை இவற்றில் கடைத்தொழில்களில் இயற்றில்;

आग्निना ताण्डवमथ संहारताण्डवं प्रोक्तम् । इत्येवं सप्तताण्डवम् ॥

இத்தன் மைத்தா கியவரங் கத்தி
லாடுதற் குக்கருத் தாகிய காக்கையு
முணர்வுற்றுத் தண்டியம் பிடிக்கிற தேது
